திருச்செந்தூர் மாசித் திருவிழாவில்

சுவாமி ஆறுமுகநயினார் சிவப்பு சார்த்தி வீதி உலா

இன்று பச்சை சார்த்தி தரிசனம், பிப்.23-ல் தேரோட்டம்

● தூத்துக்குடி

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் மாசித் திருவிழாவில் நேற்று சுவாமி சிவப்பு சார்த்தி தங்கச்சப்பரத்தில் வீதி உலா வந்தார். திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இக்கோயிலில் மாசித் திருவிழா கடந்த 14-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 7-ம் திரு நாளான நேற்று அதிகாலை 5 மணியளவில் சுவாமி சண்முகருக்கு உருகு சட்டசேவை நடைபெற்றது. தொடர்ந்து காலை 8.45 மணியளவில் சுவாமி ஆறுமுகநயினார் வெற்றிவேர் சப்பரத்தில் பக்தர்களுக்கு தரிசனம் அருளி பிள்ளையன் கட்டளை மண்டபம் சேர்ந்தார். அங்கு சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெற்றது.

தொடர்ந்து மாலை 4.30 மணியளவில் அங்கிருந்து சுவாமி சிவப்பு சார்த்தி தங்கச் சப்பரத்தில் எழுந்தருளி எட்டு ரதவீதிகளிலும் உலா வந்து மேலக்கோயில் சேர்ந்தார். திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

இன்று (பிப்.21) 8-ம் திருவிழாவை முன்னிட்டு சுவாமி ஆறுமுகநயினார் அதிகாலை 5 மணிக்கு பெரிய வெள்ளிச் சப்பரத்தில் வெள்ளை சார்த்தி திருவீதி வலம் வந்து மேலக்கோயில் சேர்ந்தார். அங்கு சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெறுகிறது.

தொடர்ந்து பகல் 11 மணிக்கு சுவாமி ஆறுமுகநயினார் பச்சைக் கடைசல் சப்பரத்தில் பச்சை சார்த்தி எழுந்தருளி வீதி உலா வந்து கோயில் சேர்கிறார்.

திருவிழாவின் பத்தாம் நாளான வரும் 23-ம் தேதி தேரோட்டம், 24-ம் தேதி இரவு தெப்பத்திருவிழா நடைபெறுகிறது. 25-ம் தேதி மாசித் திருவிழா நிறைவு பெறுகிறது. திருவிழா ஏற்பாடுகளை கோயில் அறங்காவலர் குழு தலைவர் இரா.அருள்முருகன், இணை ஆணையர் மு.கார்த்திக் உள்ளிட்டோர் செய்துள்ளனர்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் மாசித் திருவிழாவில் 7-ம் நாளான நேற்று சுவாமி ஆறுமுகநயினார் சிவப்பு சார்த்தி தங்கச்சப்பரத்தில் வீதியுலா வந்தார். திரளான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

உலகளவில் மூன்றில் ஒரு பங்கு காசநோயாளிகள் இந்தியாவில் உள்ளனர்

துணை இயக்குநர் தகவல்

● தூத்துக்குடி

காசநோயை ஒழிக்க வேண்டியதன் அவசியத்தை அனைவரும் அறிந்திடும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 17 முதல் 23 வரை காசநோய் எதிர்ப்பு வாரம் அனுசரிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்ட தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம், வல்லநாடு காசநோய் பிரிவு சார்பாக, கிள்ளிகுளம் வஉசி வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வைத்து காசநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர் பிரதிநிதி திரிஷா வரவேற்றார். கல்லூரி டீன் மா.தேரடிமணி தலைமை வகித்தார். கல்லூரி மருத்துவ அலுவலர் மு.அஜீமா தஹ்ஸீன் முன்னிலை வகித்தார். மருத்துவப் பணிகள் (காசநோய்) துணை இயக்குநர் க.சுந்தரலிங்கம் பேசும்போது, "காசநோய் என்பது பரம்பரை நோய் அல்ல. அது காற்றின் மூலம் பரவும் ஒரு வகை தொற்றுநோய். இந்தியாவில் காசநோயினால் 5 நிமிடத்துக்கு இரண்டு பேர் மரணமடைகின்றனர். உலக அளவில் மூன்றில் ஒரு பங்கு காச நோயாளிகள் இந்தியாவில் உள்ளனர்" என்றார் அவர்.

மாணவ, மாணவிகள் காசநோய் தொடர்பாக சந்தேகங்களைக் கேட்டு அறிந்து கொண்டனர். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் ஷோபா நன்றி கூறினார். தீர்வு முறை அமைப்பாளர் ச.குப்புசாமி, மாவட்ட அரசு மற்றும் தனியார்துறை ஒருங்கிணைப்பாளர் பா.மோகன், கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை கல்லூரியின் சுற்றுச்சூழல் அறிவியல் பேராசிரியர் பா.த.ரமேஷ் மற்றும் வல்லநாடு காசநோய் பிரிவு முதுநிலை சிகிச்சை மேற்பார்வையாளர் அ.அப்துல் ரஹீம் ஹீரா ஆகியோர் இணைந்து செய்திருந்தனர்.

வல்லநாடு வ.உ.சி. வேளாண்மைக் கல்லூரியில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மருத்துவப் பணிகள் (காசநோய்) துணை இயக்குநர் க.சுந்தரலிங்கம் பேசினார்.

மழையால் பாதிக்கப்பட்ட

விவசாயிகளுக்கு ரூ.208 கோடி ஒதுக்கீடு

● வேளாண் பட்ஜெட்டுக்கு வரவேற்பு

● கோவில்பட்டி

மழையால் மகசூல் இல்லாமல் பாதிக்கப்பட்ட 2 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.208 கோடி தமிழக வேளாண் பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு விவசாயிகள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசின் 2024- 25-ம் ஆண்டுக் குரிய பொது நிதி நிலை அறிக்கையை நேற்று முன்தினம் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். தொடர்ந்து நேற்று சட்டப்பேரவையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வத்தால் வேளாண்மை பட்ஜெட் தாக்கல் செய்ப்பட்டது. இதில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கரிசல்பூமி விவசாயிகள் சங்கத் தலைவர் அ.வரதராஜன் கூறியதாவது:

கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2,482 வருவாய் கிராமங்களுக்கு ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண்மைத் துறை நலத்திட்டங்களில் இட ஒதுக்கீடு இன்றி அனைத்து பிரிவினருக்கும் வாய்ப்பு வழங்க வேண்டும். சிறுதானியங்கள், எண்ணெய் வித்துகள் சாகுபடி ஊக்குவிப்பு, ஆமணக்கு சாகுபடி போன்றவற்றுக்கு நிதி ஒதுக்கீடு, முண்டு மிளகாய் சாகுபடியாளர்களுக்கு பின் ஏற்பு ஊக்கத் தொகை, சூரிய காந்தி சாகுபடியை அதிகரிக்க நிதி ஒதுக்கீடு போன்ற பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 17 மற்றும் 18-ம் தேதி பெய்த கனத்த மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு வெள்ள நிவாரணம் சுமார் 2 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.208 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சியான செய்தியாகும்.

பயறு உற்பத்தியை பெருக்க நிதி ஒதுக்கீடு, புதிய ஆழ்துளைகிணறு, தொட்டி கட்டுதல், சொட்டு நீர் பாசனம் அமைக்கும் திட்டமான நுண்ணுயிர் பாசன வசதி திட்டத்துக்கு மத்திய அரசு பங்கு ரூ.530 கோடியுடன் மாநில அரசு பங்கு ரூ.232 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசின் புதிய திட்டமான ஒரு கிராமம், ஒரு பயிர் திட்டம் வரவேற்கத்தக்கது.

மக்காச் சோளம், சூரியகாந்தி, உளுந்து, பாசி, கம்பு, பருத்தி போன்ற வீரிய ஒட்டு ரக பயிர்களை பயிரிட அண்டை மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் விதைகளை நம்பியே இங்கு சாகுபடி செய்ய வேண்டி உள்ளது. விதைப் பண்ணைகள் அமைத்து வீரிய ஒட்டு ரக விதைகளை உற்பத்தி செய்ய போதிய நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

விளாத்திகுளம், புதூர், கோவில்பட்டி பகுதி மானாவாரி நிலங்களில் நாட்டு ரக கொத்த மல்லி அதிகளவில் பயிரிடப்பட்டு பல்வேறு மாநிலங்களுக்கு செல்கி றது.

விளாத்திகுளம் பகுதியில் பயிரிடப்படும் கொத்தமல்லிக்கு புவிசார் குறியீடு பெறுவது குறித்து அறிவிப்பு வெளியாகும் என்று விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால், அதுபற்றி எந்த அறிவிப்பும் வெளியிடப் படவில்லை. புவிசார் குறியீடு பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நடப்பாண்டு பயிர் காப்பீடுக்கு ரூ.1,775 கோடி அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த தொகையை விரைவில் விடுவிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

உணவு பாதுகாப்பு உரிமம் இல்லாத

மீன் பதப்படுத்தும் ஆலை மூடல்

● தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் ச.மாரியப்பன் தலைமையில், உணவு பாதுகாப்புத் துறையினர் புதூர் பாண்டியாபுரம் சுங்கச்சாவடியில் உள்ள ஒரு கடையில் நேற்று திடீர் ஆய்வு செய்தனர். அங்கு திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்த 1 கிலோ வடை உள்ளிட்டவைகளும், வடை பரிமாற வைத்திருந்த அரை கிலோ அச்சிட்ட காகிதங்களும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன. உணவு பாதுகாப்பு உரிமம் பெறாததால், அந்த கடை உடனடியாக மூடப்பட்டது.

இதுபோல், கீழஅரசடியில் உணவு பாதுகாப்பு உரிமம் பெறாமல், இயங்கி வந்த மீன் பதப்படுத்தும் தொழிற்சாலையும் மூடப்பட்டது. பொதுமக்கள் உணவு பாதுகாப்பு குறைபாடு தொடர்பான புகார்களை 94440 42322 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கோ அல்லது உணவு பாதுகாப்புத் துறையின் TN Food Safety என்ற புகார் செயலி மூலமாகவோ அல்லது https://foodsafety.tn.gov.in என்ற இணையதளம் மூலமாகவோ புகார் அளிக்கலாம். புகார் அளிப்பவரது ரகசியங்கள் காக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லாரி மோதி முதியவர் உயிரிழப்பு

● கோவில்பட்டி

தூத்துக்குடி பிரையன்ட் நகர் 7-வது தெருவைச் சேர்ந்தவர் முருகன் (72). இவர் தனது மனைவி லட்சுமி (65), மகன் இசக்கிமுத்து கண்ணன் (46), மருமகள் பேச்சியம்மாள் (42), பேரன் சரவணன் விக்னேஷ் (20) ஆகியோருடன், வெளியூர் சென்று விட்டு காரில் தூத்துக்குடிக்கு வந்து கொண்டிருந்தார். காரை சரவணன் விக்னேஷ் ஓட்டினார். கிழக்கு கடற்கரை சாலையில் மேல அரசரடி கிராமம் அருகே வந்தபோது எதிர்பாராதவிதமாக எதிரே வந்த டேங்கர் லாரியும், காரும் மோதின. விபத்தில் சம்பவ இடத்திலேயே முருகன் உயிரிழந்தார். காயமடைந்த லட்சுமி உள்ளிட்ட 4 பேரும் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதுகுறித்து, புதியம்புத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் (பொறுப்பு) மோகன்ராஜ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

பொய் புகார் கொடுத்தவர் மீது நடவடிக்கை கோரி

கிராம நிர்வாக அலுவலர்கள் விடுப்பு எடுத்து போராட்டம்

● கோவில்பட்டி

கோவில்பட்டி தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகம் அருகே நடந்த தர்ணாவுக்கு கிராம நிர்வாக அலுவலர் சங்க வட்டத்தலைவர் ஆதிலட்சுமி தலைமை வகித்தார். செயலாளர் காளிமுத்து சேகர், பொருளாளர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட தலைவர் சுப்பையா, மாவட்டச் செயலாளர் வைரமுத்து, கயத்தாறு வட்டத் தலைவர் கருப்பசாமி, செயலாளர் கருப்பசாமி, பொருளாளர் கோபிநாத் மனோகரன் மற்றும் கோவில்பட்டி, கயத்தாறு வட்டங்களை சேர்ந்த 80 கிராம நிர்வாக அலுவலர்கள் தற்செயல் விடுப்பு எடுத்து போராட்டத்தில் பங்கேற்றனர்.

இதற்கிடையே தாக்கப்பட்டதாக கூறப்படும் பிச்சைதலைவன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த இந்திராணியின் மகன் ஜோதிகண்ணன், தமிழ் விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் டி.எஸ்.நடராஜன் ஆகியோர் கோட்டாட்சியரிடம் வழங்கிய மனுவில், "எங்கள் இடத்துக்கு பட்டா கேட்டு விஏஓவிடம் பலமுறை மனு அளித்தும் பலனில்லை. எங்களை சேர்ந்த ஒருவர், எங்களிடம் பணம் கொடுத்தால் பட்டா பெற்றுத்தருவதாக கூறினார். நாங்கள் மறுத்துவிட்டோம். அந்த நபர் விஏஓவின் ஏஜெண்ட் என்பதால், அவர் விஏஓவிடம் நாங்கள் பணம் தர மறுப்பதாக கூறியுள்ளார். இதனால் விஏஓ எனது தாயாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டு அவதூறாக பேசி தாக்கினார். எனவே, விஏஓ மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், என தெரிவித்துள்ளனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: வடசேரி தெற்கு, டிஸ்டில்லெரி ரோடு, நாகர்கோயில் பேருந்து நிறுத்தம் எதிரில், வடசேரி, அகஸ்தீஸ்வரம், நாகர்கோயில், தமிழ்நாடு 629001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	10.01.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
1658210180000026 Mr. சரவணன் S/o. நாராயணன் & Mrs. லீனா W/o. சரவணன்	(i) 15.07.2021 (ii) 14.07.2021 அன்றுள்ளபடி ₹ 31,98,164/- (ரூபாய் முப்பத்து ஒன்று லட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நூற்று அறுபத்து நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 14.07.2022 & நேரடி சுவாதீனம் - 16.11.2022	₹ 51,60,081/- (ரூபாய் ஐம்பத்து ஒன்று லட்சத்து அறுபதாயிரத்து எண்பத்து ஒன்று மட்டும்)	₹ 31,74,000/- (ரூபாய் முப்பத்து ஒன்று லட்சத்து எழுபத்து நான்காயிரம் மட்டும்)	₹ 3,17,400/- (ரூபாய் மூன்று லட்சத்து பதினேழாயிரத்து நானூறு மட்டும்)

சொத்து விவரம் : கன்னியாகுமரி பதிவு மாவட்டம் மற்றும் மனவாளகுறிச்சி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட மறு சர்வே எண்.883/9, பட்டா எண்.12243, தற்போது மறு சர்வே எண்ணில் பாகம் பிரிக்கப்பட்ட சர்வே எண்.883/9B, **கடியாபட்டனம் கிராமம், கல்குளம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம் என்னும் முகவரியிலுள்ள பரப்பு 5.533 சென்ட் நிலம் மற்றும் கட்டிடம்** மற்றும் அனைத்து இதர அனுபந்தங்கள் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ராஜலஷ்மி-க்கு சொந்தமான சொத்து, கிழக்கு: அம்புஜம்-க்கு சொந்தமான சொத்து, தெற்கு: 16 அடி அகல கிழக்கு மேற்கு வழிப்பாதை, மேற்கு: கால்வாய். சொத்தானது வெள்ளிசந்தாய் கிராம பஞ்சாயத்தில் உள்ளது.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 13.03.2024 காலை 10.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 12.03.2024 அன்றோ அதற்கு முன்னரோ காலை 11.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	11.03.2024 காலை 11.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
Mr.G.நடராஜன்: 81470 01897 & Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன்: 94455 08743

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Vinod Chauhan Mob.No. 98138 87931**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 21.02.2024
இடம்: பெங்களூரு

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்.	கடன் கணக்கு எண் / கடன்தாரர்/ அடமானதாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை in INR	டேவணித்தொகை (EMD) in INR
	கிளை அலுவலகம்: வடசேரி தெற்கு, டிஸ்டில்லெரி ரோடு, நாகர்கோயில் பேருந்து நிறுத்தம் எதிரில், வடசேரி, அகஸ்தீஸ்வரம், நாகர்கோயில், தமிழ்நாடு-629001				
1.	1658210180000023 **1.ராஜன் பவுலியன், S/o.பவுலியன், 2.விஜி, W/o.ராஜன் பவுலியன்**	(i) 13.07.2021 12.07.2021 அன்றுள்ளபடி ரூ.17,28,576/- (ரூபாய் பதினேழு லட்சத்து இருபத்து எட்டாயிரத்து ஐநூற்று எழுபத்து ஆறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 14.07.2022 & நேரடியான சுவாதீனம் 24.03.2023	10.01.2024 **அன்றுள்ளபடி** ரூ.27,43,818/- (ரூபாய் இருபத்து ஏழு லட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று பதினெட்டு மட்டும்)	ரூ.21,63,000/- (ரூபாய் இருபத்து ஒன்று லட்சத்து அறுபத்து மூன்றாயிரம் மட்டும்).	ரூ.2,16,300/- (ரூபாய் இரண்டு லட்சத்து பதினாறாயிரத்து முன்னூறு மட்டும்)

சொத்து விவரம் : மார்த்தாண்டம் பதிவு மாவட்டம், வேர்கிளம்பி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட மறு சர்வே எண்.378/5, பழைய சர்வே எண்.3687, பட்டா எண்.1720, **ஆத்தூர் கிராமம் (தற்போது எட்டக்கோடு), கல்குளம் தாலுகா, கன்னியாகுமரி மாவட்டம்** என்னும் முகவரியில் **3.200 சென்ட் (1393.92 சதுர அடி) நிலம், அதிலுள்ள கட்டிடம்,** அதனுடன் இணைத்து அதர அனுபந்த உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: ஜெயசேகரன்-க்கு சொந்தமான சொத்து, கிழக்கு: பாலையன் மற்றும் அவரது சகோதரர்களுக்கு சொந்தமான கல்லறை, தெற்கு: நடராஜன்-க்கு சொந்தமான சொத்து, மேற்கு: நடராஜன்-க்கு சொந்தமான சொத்து, ரோடு.

கிளை அலுவலகம்: எண்.19/1, தரைத்தளம், வார்டு எண்.71, பாண்டியராஜபுரம் மெயின் தெரு, மஞ்சல்மாட்டு காலனி, நாகு நகர், மதுரை-625016

2.	16602100900000002 **1. Mr.நைனா முகமது M N 2. Mrs. ஜெனிபர் பானு N**	(i) 04.10.2021 & 30.09.2021 அன்றுள்ளபடி ரூ.28,13,304/- (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து பதிமூன்றாயிரத்து முன்னூற்று நான்கு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 21.09.2022 & நேரடியான சுவாதீனம் 05.08.2023	20.02.2024 **அன்றுள்ளபடி** ரூ.43,84,135/- (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து எண்பத்து நான்காயிரத்து நூற்று முப்பத்து ஐந்து மட்டும்)	ரூ.24,00,000/- (ரூபாய் இருபத்து நான்கு லட்சம் மட்டும்).	ரூ.2,40,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)

சொத்து விவரம் : பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், மேலபாளையம் சார் பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட பழைய வார்டு எண்.10, புதிய வார்டு எண்.9, புதிய திருநெல்வேலி மாநகராட்சி 37வது வார்டு, **பழைய மேதாமார்பாளையம் வடக்கு தெரு, தற்போது மேதாமார்பாளையம் 2வது தெரு, கிழவீரராகவபுரம் கிராமம், மேலபாளையம் நகராட்சி, பாளையங்கோட்டை தாலுகா,** என்னும் முகவரியில் அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 9.625 அடி, வடக்கு தெற்காக கிழக்கு மற்றும் மேற்கு திசையில் 44 அடி, மொத்தம் **423.50 சதுர அடி, அதற்கு சமமாக 39.34 சதுர மீட்டர் நிலம் இதில் கட்டப்பட்டுள்ள RCC வீட்டு கட்டிடம்,** கதவு எண்.25A, பழைய சொத்து வரி மதிப்பீட்டு எண்.88186, பழைய சொத்து வரி மதிப்பீட்டு எண்.89764, புதிய சொத்து வரி மதிப்பீட்டு எண்.01871, மற்றும் டெபாசிட்டுகள் மற்றும் மற்ற வசதிகள். பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: வடக்கு: மேதாமார்பாளையம் 1வது தெரு, கிழக்கு: N.பீர் மொய்தீன்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, மேற்கு: சேகுமீராம்மாள்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, தெற்கு: முகமது ரஃபீக்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து. அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு மற்றும் தெற்கு திசையில் 3 அடி, வடக்கு தெற்காக கிழக்கு மற்றும் மேற்கு திசையில் 69 அடி, மொத்தம் **207 சதுர அடி, அதற்கு சமமாக 19.23 சதுர மீட்டர் வழிப்பாதை,** அதனுடன் டெபாசிட்டுகள் மற்றும் அனைத்து உபகரணங்கள், அனுமந்த உரிமைகள், பொருத்தப்பட்டுள்ளவைகள். எல்லைகள்: வடக்கு: மேதாமார்பாளையம் 1வது தெரு, கிழக்கு: சையது முகமது-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, மேற்கு: 1வது ஷெட்டியூல் சொத்தில் முகமது ரஃபீக்-க்கு சொந்தமான சொத்து மற்றும் பொது சந்து, தெற்கு: மேதாமார்பாளையம் 2வது தெரு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 27.03.2023 வ.எண்.1: காலை 10.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை
வ.எண்.2: காலை 11.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்:
தேதி: 26.03.2023 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	25.03.2023 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr.G.நடராஜன்: 81470 01897, Mr.கிருபாகர் ராதாகிருஷ்ணன்: 94455 08743 & Mr.R.புஷ்பகாந்த்: 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mob: 9813887931**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங